# வடபகுதியில் பிறந்தவர்களின்

## மாளிகாவத்தை பிறப்புச் சான்றிதழுக்கே பாஸ்போர்ட் வழங்க முன்னுரிமை

கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள பதிவாளர் தலைமை அலுவலகத்தில் பெறப்படும் வடபகுதி பிறப்புச்சான்றிதழ்களுக்கே பாஸ்போர்ட் வழங்குவதில் குடிவரவு குடியகல்வு திணைக்களம் முன்னுரிமை அளித்துவருகிறது. வடபகுதியில் பெறப்பட்ட பிறப்புச்சான்றிதழ்களை பாஸ்போர்ட் விண்ணப்பத்தில் இணைத்தால் அவை உண்மைப் பிரதியா என அறிவதற்கு மாளிகாவத்தை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும், அவை அங்கே மாதக்கணக்கில் தேங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மாளிகாவத்தை பதிவாளர் அலுவலகத்தில் ஒரே நாளில்

—04 ஆம் பக்கம் பார்க்க

# கொழும்பு பல்கலைக்கழகம் அருகே

## மினிபஸ் விபத்தில் மாணவி பலி மாணவர்களால் பஸ் தீக்கிரை

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அருகில் நேற்று மாலை நடைபெற்ற மினிபஸ் விபத்தில் கலைப்பீட மாணவி ஒருவர் பலியானார். இதனால் ஆத்திரமுற்ற மாணவர்களினால் அந்த மினிபஸ் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. நேற்று மாலை பல்கலைக்கழகத்திற்கு அருகில் தேர்ஸ்டன் வீதி நடைபாதையில் இம்மாணவி சென்று கொண்டிருந்த போது மினிபஸ் ஒன்று நடைபாதையில் திசைமாறி ஏறியதில் அம் மாணவி ஸ்தலத்திலேயே நசுங்குண்டு மரணமானார். இதனால் ஆத்திரமடைந்த மற்றைய மாணவர்களால் பஸ்ஸில் இருந்த பயணிகள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 . 00

# முரசொலி

முரசு 06 ஒலி 17 பிரசோற்பத்தி கார்த்திகை 28 (14-12-1991) சனி

# சமூகக்கல்வி வினாத்தாளில் போர் பற்றியும் கேள்வி!

நேற்றுக் காலை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் வரலாறும், சமூகக்கல்வியும் (II) பழைய புதிய பாடத்திட்டப் பரீட்சைகள் நடாத்தப்பட்டது.

இதற்கான வினாத் தாளில் 10 வினாக்கள் கொடுக்கப்பட்டு அவற்றில் ஆறுக்கு விடையளிக்குமாறு மாணவர்கள் கேட்கப்பட்டிருந்தனர்.

இதில் நான்காவது வினா இராணுவ டாங்கி ஒன்றின் வரைபடத்தைக் கொண்டிருந்தது. அதனைச் சுற்றி போரில் மரணமெய்தியவரின் சடலங்கள் காணப்படுவதாக வினாவில் தெரிவிக்கப்பட்டு 'போரின் போது அழிவுக்குள்ளாகும் ஏனைய 3 விடயங்களைக் குறிப்பிடுக' எனக் கேட்கப்பட்டிருந்தது.

சமூகக் கல்வியில் கேட்கப்படவேண்டிய எத்தனையோ வினாக்கள் இருக்கையில் இந்த நான்காவது வினா தமக்கு ஆச்சரியத்தையே தந்ததாகப் பரீட்சை எழுதிய தமிழ் மாணவர்கள் தெரிவித்

— 04ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் நாடு அரசுக்கு எதிராக கர்நாடகத்தில் வன்முறை வெடிப்பு!

## தமிழக நிறுவனங்கள் தீக்கிரை பங்களூரில் ஊரடங்கு அமுலானது

காவிரி ஆற்று நீரை தமிழகத்திற்கு வழங்குமாறு இந்திய மத்திய அரசு உத்தரவிட்டதையடுத்து கர்நாடக மாநிலத்தில் வன்முறைகள் வெடித்துள்ளன.

நேற்று அம்மாநிலத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு தமிழ்நாட்டவர்களுக்கு உரிமையான திரையரங்குகள் ஸ்தாபனங்கள் என்பன நேற்று வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டன. ஐந்து வாகனங்களும் தீக்கிரையாகின. வன்முறையாளர்களை கலைக்க பொலிஸார் நடத்திய சூட்டில் இருவர் பலியாகினர்.

அதேசமயம் அரசின் உத்தரவை ஆட்சேபித்து முன்னாள் கர்நாடக முதலமைச்சர் ஹெக்டே உட்பட ஐந்து எம். எல். ஏக்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்தனர். மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் மேலும் பலர் ராஜினாமா செய்வர் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## க. பொ. த. (சா) பரீட்சை

### மிகுதி வினாத்தாள்கள் நேற்று இங்கு வந்தன

யாழ் மாவட்டத்திற்கான க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குரிய மிகுதி வினாத் தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கொழும்பிலிருந்து விமான மூலம் பலாலிக்கு எடுத்து

—4 ஆம் பக்கம் பார்க்க

## பிணையில் தன்னை விடுவிக்க நாகராஜன் நீதிமன்றில் மனு

தம்மை பிணையில் விடுவிக்குமாறு கோரி தமிழக முன்னாள் உள்துறைச் செயலர் ஆர். நாகராஜன் நீதிமன்றத்தில் மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இவர் தமது மனுவில் தாம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு காங்கேயன் ஓடை

### தடைமுகாமில் தீர்காமல் [illegible]

## தச்சன் காட்டில் சினைப்பர் தாக்கு 3 இராணுவத்தினர் பலி

தச்சன் காட்டில் நேற்று [illegible] கினர். [illegible] மீது புலிகள் குறிபார்த்து [illegible]

## கிளிநொச்சி ஊரடங்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று மாலை முதல் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை அமுல் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## சிவாஜி கணேசன் கோரிக்கை

தமிழக அ. தி. மு. க. அரசு பயங்கரவாத தடைச்சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதை தவிர்க்குமாறு ஜனதா தள தமிழக மாநிலக்கட்சித் தலைவர் சிவாஜி கணேசன் நேற்று அறிக்கை மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஒட்டகப்புலத்தில் சத்தங்கள்

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஒட்டகப்புலம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகத்தையும் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

எனினும் அச்சுவேலிப்பகுதியில் க. பொ. த சாதாரண தரப் பரீட்சை எதுவித தடையுமின்றி சுமுகமாக நடைபெற்றது. (43)

## தலாய்லாமா வேண்டுகோள்

இவ்வருடம் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவரான பர்மிய எதிர்க்கட்சி [illegible]

# 3 இராணுவத்தினர் பலி

தச்சன் காட்டில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் பலியாகினர்.

நேற்று மதியம் தச்சன் காட்டுப்பகுதியில் காவலரண் ஒன்றில் இருந்த படையினர் மீது புலிகள் குறிபார்த்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு சிப்பாய்கள் ஸ்தலத்தி

— 04ஆம் பக்கம் பார்க்க

# தொண்டமானின் சமரஸத்திட்டம் பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம்

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கான அமைச்சர் தொண்டமானின் புதிய சமரஸத் திட்டம் மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் அதன் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை நேற்று செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தொண்டமான் வெளியிட்டார்.

"வடக்கு கிழக்குப் பிரச்

— 06ஆம் பக்கம் பார்க்க

* கொழும்பு ஆஸ்பத்திரி

# நரம்பு சிகிச்சைப் பிரிவில் ஸ்ரீமாவோ அனுமதி!

எதிர்க்கட்சித்தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று கொழும்பு பெரியாஸ்பத்திரி நரம்புநோய் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பரிசோதனைக்காகவே நரம்புநோய்ப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார் எனவும், அவருக்கு ஆபத்து ஏதுமில்லை எனவும் நரம்புநோய் வைத்திய நிபுணர் டொக்டர் பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

## ஒரு வாரம் நிவாரணம்

வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலி

— 04ஆம் பக்கம் பார்க்க

# தடைமுகாமில் நிற்காமல் சென்றவர் சூட்டுக்குப் பலி

மட்டக்களப்பு காங்கேயனோடை தடைமுகாமில் நிற்காமல் சென்ற ஒருவரை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வெல்லாவெளி மண்டூர் பகுதிகளி

— 05ஆம் பக்கம் பார்க்க

# அச்சுவேலியில் வதந்திபரவி மக்கள் பதற்றம்

இராணுவம் வருவதாக வெளியான வதந்தி ஒன்றைத் தொடர்ந்து அச்சுவேலி மக்கள் இன்று பதற்றமடைந்து வெளியேறத் தொடங்கினர்.

சிலமணிநேரத்தில் உண்மை நிலையை அறிந்த மக்கள் மீண்டும் தமது வழமை இடங்

— 05ஆம் பக்கம் பார்க்க

மட்டக்களப்பில்

# தமிழர் வீட்டுத்தளபாடங்கள் குடியேற்றவாசிகளுக்கு செல்கிறது

மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் உள்ள முகாமிலிருந்து குறிஞ்சாமுனைப் பகுதிக்கு ரோந்து சென்ற படையினரால் பல வீடுகள் சூறையாடப்பட்டுள்ளன.

சில வீடுகளில் தளபாட

— 04ஆம் பக்கம் பார்க்க

# தொழிலாளர்மீது தாக்குதல்

பசறை, கனவரல்ல தோட்டத்தில் புகுந்த இனம் தெரியாத சிலர் தாக்கியதில் மூன்று தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் படுகாய

— 04ஆம் பக்கம் பார்க்க

## வேண்டுகோள்

இவ்வருடம் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவரான பர்மிய எதிர்க்கட்சித் தலைவி ஆங்சான் சூகியை விடுதலை செய்யுமாறு தலாய்லாமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பர்மாவின் இராணுவ ஆட்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சந்தனக்காடு நாடகம்

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினரின் தயாரிப்பில் உருவான பொன் கணேசமூர்த்தியின் 'சந்தனக்காடு' நாடகம் நாளை 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணியளவில் பண்டத்தரிப்பு

—04 ஆம் பக்கம் பார்க்க

## சீனி விநியோகம்

காரைநகர் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் இன்று முதல் எதுவித கட்டுப்பாடுமின்றி கிலோ நாற்பது ரூபா வீதம் சீனி வழங்கப்படவுள்ளது.

கொம்படி பாதையாகக் கொண்டு வரப்பட்ட சகல செலவினங்களையும் கருத்திற் கொண்டே ஒரு கிலோ சீனி நாற்பது ரூபா வீதம் வழங்கப்படுகிறது எனத்தெரிவிக்கப்படுகிறது. (18)

# வடக்கு கிழக்கு சிவல் தொழிலாளர்க்கு

# விரைவில்காப்புறுதிதிட்டம்

## பனை அபிவிருத்திச்சபை நடைமுறைப்படுத்தும்

வடக்குக் கிழக்குப் பகுதிகளி லுள்ள சீவல் தொழிலாளர் களுக்கு விபத்துக்காப்புறுதித் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக அறி விக்கப்படுகின்றது.

பனம்பொருள் அபிவிருத் திச் சபைக்கு பெருந்தோட் டத்துறை அமைச்சு இதற் கான அனுமதியை வழங்கி யுள்ளது.

சீவல் தொழிலாளர்கள் வயது முதிர்ச்சியின் நிமித்தம் தொடர்ந்தும் தொழில் செய்ய முடியாது போனால் அல்லது தொழில் ரீதியான விபத்தில் அவர்கள் சிக்கித் தொடர்ந்து தொழில் செய்ய முடியாது போனால் இத்திட் டத்தின்கீழ் அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

வடக்குக்கிழக்கில் சுமார் 20 ஆயிரம் பேர் தற்பொழுது சீவல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் கணிக்கப்பட் டுள்ளது.

## தெய்யிட்டி சாதனை

அண்மையில் வெளியான 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் தையிட்டி கணேச வித்தியா லய மாணவி சோதிலிங்கம் ஸ்ரீ பிரணவி அதி கூடிய புள்ளி களைப் பெற்றுள்ளதாக அறி விக்கப்படுகின்றது.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

தென்மராட்சி உதவி அரச அதிபர் பிரிவின் மட்டுவில் தெற்கில் என்னுமிடத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களை. இராஜ ராஜேஸ்வரனால் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட வுள்ளது. (14)


### தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் கொடிகாமம்

## அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் தனது 1992ஆம் ஆண்டிற்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறிச் சேவை ரெண்டர் மூலம் கோரப்படுகின்றது விண்ணப்பப் பத்திரம் பிரதம சங்கத்தில் பெற்று பூர்த்தி செய்து 26-12-91-ந் திகதிக்கு முன்பு பொது முகாமையாளரிடம் சேர்த்தல்வேண்டும். கேள்விப்பத்திரம் பெறுவதற்கு ரூபா 100/- செலுத்த வேண்டும். இப்பணம் மீள அளிக் கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 1500/- செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்

கொடிகாமம்,
11-12-1991

12039

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான ஒப்பந்தக்காரரைத்

## தெரிவு செய்தல் - 1992

1992 ஆம் ஆண்டிற்கு யாழ் மாநகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கட்டாக் காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான ஒப்பந்தக் காரரைப் பதிவு செய்வதற்குரிய விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர், விண்ணப்பப் படிவங் களையும், மேலதிக விவரங்களையும் யாழ் மாநக ராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியின் பணி மனையில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

படிவங்கள் வழங்கப்படும். திகதி 23-12-91 நண்பகல் 12.00 மணிவரை. பூர்த்திசெய்யப்பட்ட படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 24-12-91 நண்பகல் 12.00 மணி வரை.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10-12-1991

12050

### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கையில்

### 14-12-91 இன்று பகல்

### 12.மணியளவில்ஆரம்பமாகின்றது

### ஜெசிததாரா உணவக சுற்றாடலில

## நியாய விலைச் சந்தை

உங்களுக்குத் தேவையான பொருள்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ள உடனே விரையுங்கள். ஒரே கூரையின் கீழ் அனைத்து மனைப் பொருள் களையும் பெற்றுக் கொள்ள நயமான, நம்பிக்கையான இடம்.

நிறை எடை - நிதானவிலை - தரமான பொருள்
இவற்றிற்கு நியாய விலைச் சந்தை
இன்றைய விசேட சலுகை சீனி கிலோ 36,=
ஒருவருக்கு ஒரு கிலோ மட்டும்.
உணவு பானங்களும் உண்டு. விலை 25/= மட்டுமே

12046


### கரைச்சிப் பிரதேச சபை 1992 ஆம் ஆண்டிற்கான

## கேள்வி அறிவித்தல்

01.01.1992 ஆந் திகதி தொடக்கம் 31.12.1992 ஆந் திகதி வரைக்கான காலப் பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக் கும் குத்தகைகள் சார்பில் கேள்விகள் 27.12.1991 ஆந் திகதி நண்பகல் 12. மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப் படும் கேள்விப் பத்திரங்கள் கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் 24.12.1991 ஆந் திகதி 12.00 மணி வரை கீழ்க் குறிப்பிடும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன்பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் ''விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது அதற்கென அலு வலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விவரங்களையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப்பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| **கரைச்சிப் பிரதேச சபை கிளிநொச்சி உப அலுவலகம்** | | | |
| 1. கிளிநொச்சி சந்தை | ரூ 150,000 | ரூ 10000 | ரூ 50/- |
| 2. பரந்தன் சந்தை | ரூ 20,000 | ரூ 500 | ரூ 50/- |
| 3. கிளி. மாட்டிறைச்சிக் கடை | ரூ 100 000 | ரூ 1000 | ரூ 50/- |
| 4. கிளி. ஆட்டிறைச்சிக் கடை | ரூ 50,000 | ரூ 500 | ரூ 50/- |
| 5. பரந்தன் சந்தை மாட்டிறச்சி கடை | ரூ 30,000 | ரூ 500 | ரூ 50/- |
| **முரசுமோட்டை உப அலுவலகம்** | | | |
| 1. முரசுமோட்டை சந்தை | ரூ 3,050 | ரூ 100 | ரூ 25/- |
| 2. வட்டக்கச்சி சந்தை | ரூ 7,000 | ரூ 250 | ரூ 25/- |
| 3. ட/10 உருத்திரபுரம் சந்தை | ரூ 4,500 | ரூ 100 | ரூ 25/- |
| 4 ட/8 ,, ,, | ரூ 800 | ரூ 100 | ரூ 25/- |


உங்கள் எழிலான தோற்றத்திற்கு சிறந்த ரக நவீன ஆடைகளை தைத்துக்கொள்ள நாடுங்கள்

## எழில்

எழில் ஆடைகள் உங்களை மேலும் எழிலாக்கும்.

யாழ் நகரில்:-

### ஜோ எகட்டன்

### செனித் மார்க்கட்டிங் அண்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ

19/3 கொழும்புத்துறை சாலை,
சுண்டுக்குளி.

| | | | |
|---|---|---|---|
| 1. முரசுமோட்டை சந்தை | ரூ 3,050 | ரூ 100 | ரூ 25/- |
| 2. வட்டக்கச்சி சந்தை | ரூ 7,000 | ரூ 250 | ரூ 25/- |
| 3. டீ/10 உருத்திரபுரம் சந்தை | ரூ 4,500 | ரூ 100 | ரூ 25/- |
| 4 டீ/ 8 ,, ,, | ரூ 800 | ரூ 100 | ரூ 25/- |
| 5. தருமபுரம் சந்தை | ரூ 900 | ரூ 100 | ரூ 25/- |
| 6. ஜெயந்திநகர் சந்தை | ரூ 1,850 | ரூ 100 | ரூ 25/- |
| 7. ஸ்கந்தபுரம் சந்தை | ரூ 500 | ரூ 100 | ரூ 25/- |
| 8. கண்டாவளைச் சந்தை | ரூ 100 | ரூ 50 | ரூ 15/- |
| 9. ஆனையிறவு சந்தை | ரூ 100 | ரூ 50 | ரூ 15/- |
| 10. இரணைமடுச் சந்தை | ரூ 1,000 | ரூ 100 | ரூ 15/- |

## மாட்டிறைச்சிக் கடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. முரசுமோட்டை கடை இல, 1 | ரூ 1,500 | ரூ 100 | ரூ 25/- |
| 2 ,, ,, 2 | ரூ 1,500 | ரூ 100 | ரூ 25/- |
| 3. டீ/10 உருத்திரபுரம் | ரூ 1,500 | ரூ 100 | ரூ 25/- |
| 4. வட்டக்கச்சி சந்தை | ரூ 13,500 | ரூ 500 | ரூ 50/- |
| 5. டீ/8 உருத்திரபுரம் | ரூ 4,500 | ரூ 100 | ரூ 25/- |
| 6. கனகபுரம் | ரூ 5,000 | ரூ 250 | ரூ 25/- |
| 7. திருநகர் | ரூ 3,500 | ரூ 100 | ரூ 25/- |
| 8. ஸ்கந்தபுரம் | ரூ 1,000 | ரூ 100 | ரூ 25/- |
| 9. தருமபுரம் | ரூ 5,000 | ரூ 250 | ரூ 25/- |
| 10. ஆனையிறவு | ரூ 1,000 | ரூ 100 | ரூ 25/- |
| 11. சேவில் வீதி | ரூ 1,500 | ரூ 100 | ரூ 25/- |
| 12. இரணைமடுச் சந்தி | ரூ 10,000 | ரூ 100 | ரூ 25/- |
| 13. லக்சபானா மாட்டிறைச்சிக் கடை | ரூ 3,000 | ரூ 100 | ரூ 25/- |

## ஆட்டிறைச்சிக் கடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. இரணைமடுச் சந்தி | ரூ 1,000 | ரூ 100 | ரூ 25/- |
| 2. சேவில் வீதி | ரூ 1,000 | ரூ 100 | ரூ 25/- |

09.12.1991

நா. இந்துமதி
விசேட ஆணையாளர்,
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

12051


**செனித் மார்க்கட்டிங் அண்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ**

19/3 கொழும்புத்துறை சாலை,
சுண்டுக்குளி.

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை) உங்கள் ஆடைகளை 24 மணிநேரத்தில் தைத்து வழங்குவோம்.

12048

உங்களை அன்புடன் வரவேற்க
காத்திருக்கிறது

**ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்**

நிறைவான சேவை, சுத்தம், சுகாதாரமான உணவு,
அமைதியான சூழல்.

ஒருதரம் வந்து சுவைத்துப் பாருங்களேன்
எமது உணவு வகைகளை.

ஜோ எக்டனின்
ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

19/3 கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை
சகலவித உணவு ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்
எமக்கு வேறு கிளைகள் இல்லை

12044

# சவர்க்காரம், மருந்து வகைகள் உட்பட எட்டுப் பொருள்கள் மீதான தடை நீக்கம்!

## எனினும் 39 பொருள்கள் மீதான தடை தொடர்கிறது!

சவர்க்காரம், மருந்துகள் உட்பட எட்டுப் பொருள்களை யாழ் பிரதேசத்திற்கு எடுத்துவர விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது

மருந்து வகைகள், சவர்க்காரம், இனிப்புப் பொருள்கள், சோயா, சப்பாத்துப் பொலிஷ், மதுசாரம், தேய் பன்ஸரவி, ரெறாசோஸ ஆகிய எட்டுப் பொருள்களையுமே வடக்கிற்கு எடுத்துவர தற்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வடக்கிற்கு எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டிருந்த 47 பொருள்களின் பட்டியல் 39 ஆகக் குறைந்துள்ளது.

வவுனியா நகரம், மன்னார், மற்றும் காரைதீவு, மண்டைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய யாழ் தீவுகளுக்கும் ஆயுதம், வெடிமருந்துகள் தவிர்ந்த ஏனைய பொருள்களை எடுத்துச் செல்லத் தடையில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

## 37 மாடிக் கட்டிடம் கொழும்பில் உருவாகிறது!

இலங்கையிலேயே மிக உயரமான கட்டிடமொன்று விரைவில் கொழும்பில் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டிடம் 37 அடுக்குகளைக் கொண்டதாக இருக்கும்.

சிங்கப்பூர் நிறுவனமொன்று இந்த 37 மாடிக்கட்டிடத்தை அமைக்கவுள்ளது.

இந்தச் சிங்கப்பூர் நிறுவனம் கொழும்பு நகர்ப்பகுதியில் பல வீட்டுத் திட்டங்களையும் அமைக்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## நிலைமை சீரானதன் பின்னரேயே யாழ்பகுதிக்கு மின்சாரம்! சபையில் அறிவிப்பு!

நிலைமை சீரானதன் பின்னரேயே யாழ் பிரதேசத்திற்கு மீண்டும் மின்சார வசதி வழங்கப்படுமென சக்திவலு அமைச்சர் சந்திரா பண்டார நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான மின் இணைப்புகள் பல துண்டிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக அவற்றை இப்போது திருத்த முடியாதுள்ளது என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## உயர்மட்டக் குழு நியமனம்

தமிழ்நாட்டில் சகல பாடசாலைகளிலும் தமிழ்மொழியைக் கட்டாய பாடமாக்குவது குறித்து ஆராய்வதற்காக தமிழக அரசு உயர்மட்டக் குழுவொன்றை நியமித்துள்ளது.

இக்குழு மூன்று மாத காலத்தில் இதுபற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்,

## 'சீநோர்' நிறுவனமும் விரைவில் மக்கள் மயமாகும்! சபையில் அமைச்சர் பெரேரா அறிவிப்பு

'சீநோர்' நிறுவனம் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளது

கடற்றொழில் கடல்வள அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இத்தகவலைத் தெரிவித்தார்.

நோர்வே, இலங்கை அமைப்பினால் இலங்கையில் காரைநகரில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட 'சீநோர்' திட்டம் பின்னர் தென்பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

தற்பொழுது வடக்கில் குருநகர், காரைநகர்ப்பகுதிகளில் 'சீநோர்' தொழிற்சாலைகள் உள்ளன.


### சிறு விளம்பரம்

**தேவை**

விரைவில் செயற்பட விரும்பும் நியாய விலை சந்தைக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. சிறந்த கணித தகைமை உடையோரும், சேவை மனப்பான்மை உள்ளோரும் அண்மையில் கிடைக்கப்பெற்ற சான்றிதழ்களோடும், கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரத்துடனும் நேரில் விண்ணப்பிக்க. திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். ஜோ. எக்டன் செனித், 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.


## 20 ஆம் திகதி கொழும்பில்...

சார்க் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாடு இம் மாதம் 20 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஒருநாள் சார்க் மகாநாடு 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

## கொக்கட்டிச்சோலை படுகொலை விசாரணை அறிக்கை விரைவில்

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக சர்வதேச விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவின் பல பரிந்துரைகளை இலங்கை அரசு ஏற்றுள்ளதாகவும் இது குறித்து விரைவில் அறிக்கையொன்று வெளியிடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அத்தனகல அமைப்பாளராக சந்திரிகா நியமனம்

அத்தனகல தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்

பண்டாரநாயக்கா குடும்பத்தின் நம்பிக்கைக்குரிய தொகு... வகையில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க சுதந்திரக் கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளதாக கட்சியின் ஒரு பிரிவினர் குற்றஞ்சாட்டி வரும் இவ்வேளையில் இப் புதிய நியமனம் மேலும் சிக்கலை உருவாக்கி...

## கத்தரிக்கோலுக்கு காட்சி மட்டுமல்ல படப் பெயரும் இனி இலக்காகும்!

இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சு திரைப்படத் தணிக்கை முறையின் மேலும்... மற்றும் குழந்தைகள் சம்பந்தமான வன்முறைக்காட்சிகள், மிருகங்களுக்கு...

நேற்றைய தொடர்ச்சி

## தமிழீழ பொருளாதாரத்தில் கடற்றொழிலின் முக்கியத்துவம்

### கடற்றொழில் சம்பந்தப்பட்டோர் பிரச்சினைகள்

அன்றாட சீவியத்துக்கு உழைக்கும் தொழிலாக இது இருந்தபோது பலர் ஏழைகளாக இருந்தனர். 1960 களில் இத் தொழிலில் நைலோன் வலைகள், இயந்திரங்கள் புகுத்தப்பட்டதால் வருவாய் பெறுவதில் வளர்ச்சிகாணப்பட்டது ஆயினும் ஊதாரித்தனச் செலவுகள் அதிகரித்தன. சேமிப்பு மேற்கொள்ளப்படவில்லை. உழைப்பு அதிகரித்ததே தவிர கல்வியில் நாட்டம், சிக்கனச் செலவு, எதிர்கால அனுகூலங்கள் எதிலும் அக்கறையில்லாதவர்களானார்கள்.

இத் தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்கள் தமக்கு வேண்டிய உபகரணங்களை இறக்குமதியாளர்களிடமிருந்தே கொள்வனவு செய்ய வேண்டியிருக்கிறது. வலைகள் வள்ள மூலப் பொருள்கள், இயந்திரங்கள் முதலியவையும் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றவையாகும். இதனால் உரிய நேரத்தில் பொருள்கள் கிடைக்காமல் போவதும் உண்டு.

மேலும் இத் தொழில் சார்ந்தோர் நவீன தொழில்நுட்ப முறைகளை அறியாதுள்ளனர். இவர்கள் 25 வருடங்கள் பின் தங்கி நிற்கின்றனர்.

தமிழீழக் கடற்பகுதியில் ஆண்டு முழுவதும் மீன் பிடிக்கக்கூடிய பருவ நிலை உள்ளது. இதனால் சிங்கள மீன் பிடியாளர்கள் தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுப் பருவத்தின் போது, தமிழீழ மேற்குக் கரையோரங்களிலும், கிழக்குக் கரையோரங்களிலும் வாடி போட்டு மீன் பிடித்து வருவாய் தேடுகின்றனர், இவ் வாய்ப்புகள் எமது தொழிலாளர்களுக்குக் கிடைத்தல் மிக முக்கியமானதாகும்.

**எடுக்கவேண்டிய சில நடவடிக்கையாவன:-**

மீன்பிடித் தொழில், பெரும் வருவாயையும், அந்நியச் செலாவணியையும், ஏராளமான வேலைவாய்ப்பையும் தரக்கூடியது என்பதனால் ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சாலவும் நன்று.

- நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்டு விரிவாக்கத்திட்டங்கள் வகுக்கப்படுதல்;
- பல்கலைக்கழக மட்டத்தில் மீன்பிடிக் கல்விக்கு உரிய இடம் அளிக்கப்படுதல்;
- பாரம்பரிய மீன்பிடி முறைகளுடன் நவீன மீன்பிடி முறைகள் புகட்டப்படுதல்;
- உபகரணங்கள் உள்ளூரில் உற்பத்தி செய்வதற்கான நடைமுறைகளை உருவாக்குதல்;
- இது ஓர் உழைக்கும் தொழில் என்ற மனோபாவத்தை உருவாக்குதல் என்பவற்றுடன்,
- மற்றும் தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீன்பிடித் தொழிலில் வளர்ச்சி காணுவோமாக.

— இரா சிவசந்திரன்

(முற்றும்)

## குழந்தைப் பண்ணைகள் நடாத்த ஜனவரி முதல் இங்கு தடை!

இலங்கையில் குழந்தைப் பண்ணைகள் நடாத்தப்படுவதைத் தடுக்கும் புதிய சட்டமொன்று ஜனவரியில் கொண்டுவரப்படவுள்ளது.

வெளிநாட்டவர்கள் இலங்கைக் குழந்தைகளைத் தத்தெடுப்பதைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இச் சட்டம் கொண்டுவரப்படுவதாக சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

## இவர்களும் புலிகளாம்

...படும். ஜோ. எகட்டன் செனித், 19/3கொழும்புத் துறை வீதி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. 12041

தேவை

ஆண், பெண், சிறுவர் ஆடைகள் தைப்பதில் கைதேர்ந்த அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை நற்சாட்சி அனுபவப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்க. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் செனித் ஜோ. எகட்டன் 19/3 கொழும்புத்துறைசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. 12043

விற்பனைக்கு

இரவில் ஆழ்ந்த உறக்கம் சுகவாழ்வுக்கு உதவுகிறது உறக்கம் கெடுக்கும் நுளம்பினை விரட்டிட இரவில் நிம் தூபம் புகையுங்கள், இயற்கைத் தூபம் ஒரு பைக்கற் விலை ரூபா, 3/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது' மிக்கினைத் 12035

...அமைப்பாளராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பண்டாரநாயக்கா குடும்பத்தின் நம்பிக்கைக்குரிய தொகுதியாக அத்தனகல தொகுதி விளங்கி வருகின்றது.

கட்சி விதிகளுக்கு முரணான ... கட்சியின் ஒரு பிரிவினர் குற்றஞ்சாட்டி வரும் இவ்வேளையில் இப் புதிய நியமனம் மேலும் சிக்கலை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 100க்கும் மேற்பட்ட சாரதிகளை தென்பகுதியில் 'காணவில்லை'!

தென்பகுதியில் சமீப நாள்களில் நூற்றுக்கும் மேற்பட்ட வாடகைக்கார் சாரதிகள் காணாமற் போயுள்ளதாக பொலிஸ் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

காணாமல் போன சில சாரதிகளின் எலும்புக் கூடுகள் கலஹா பகுதியில் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் பற்றிய புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## வீதியோரங்களில் பனை நாற்றுக்கள்

கைதடி- கண்டிவீதிக் கரையோரங்களில் பனைமரக் கன்றுகள் மிக்கவைத் நிறுவனத்தினால் நாட்டப்பட்டுள்ளன. (14)

## 200 கோடி ரூபா செலவில் தென்பகுதிக்குளங்கள் புனரமைப்பு

தேசிய நீர்ப்பாசனம் புனரமைப்புத் திட்டம் 200 கோடி ரூபா செலவில் அமுல் செய்யப்படவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 1000 சிறுகுளங்களும், 60 மத்திய தர பெரிய குளங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தென்பகுதியிலுள்ள பல குளங்களும் புனரமைக்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## படப் பெயரும் இனி இலக்காகும்!

இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சு திரைப்படத் தணிக்கை முறையில் மேலும் பல கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதன்படி இனிமேல் திரைப்படக் காட்சிகள் மட்டுமல்ல திரைப்படங்களின் பெயர்களும் தணிக்கை செய்யப்படும். அவை மரபுகளை மீறாதிருக்கும் வகையில் இத் தணிக்கை அமையும்.

மற்றும் குழந்தைகள் சம்பந்தமான வன்முறைக் காட்சிகள், மிருகங்களுக்குக் கொடுமை விளைவிக்கும் காட்சிகள், இரு பொருள்படும்படியான வசனங்கள், பாலுறவுத் தடுமாற்றக் காட்சிகள் என்பனவும் இனிமேல் திரைப்படத் தணிக்கைக் குழுவினரின் கத்தரிக்கோலுக்குத் தப்ப முடியாது.

## புதியசாரதி அனுமதிப்பத்திர விநியோகம் ஆரம்பம்

வாகனசாரதிகளுக்குப் புதிய அமைப்பிலான சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

புதிய அனுமதிப் பத்திரம் அங்கீகரிப்புப் புத்தகமொன்றையும் கொண்டிருக்கும். சாரதிகள் ஒழுங்கு விதிகளை மீறினால் அதுபற்றி இந்த அங்கீகரிப்புப் புத்தகத்தில் குறிக்கப்படும்.

பழைய சாரதி அனுமதிப் பத்திரங்களை ஒப்படைத்தவர்களுக்குக் கட்டம் கட்டமாகப் புதியவை வழங்கப்படும்.

மொத்தம் 11 லட்சம் சாரதிகள் இப் புதிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வர்.

1990 ஜூலை 13ஆம் திகதிக்குமுன் பழைய அனுமதிப் பத்திரங்களை ஒப்படைத்தவர்களுக்கு முதல் தொகுதியாக 2 லட்சம் புதிய அனுமதிப் புத்தகங்கள் வழங்கப்படும். ஏனையவர்களுக்கு கட்டம் கட்டமாக வழங்கப்படும்.

...ர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

## இவர்களும் புலிகளாம்

கிரேக்கத்திலிருந்து கொழும்பிற்குத் திருப்பி அனுப்பப்பட்ட 13 தமிழ் இளைஞர்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என இலங்கைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த 13 இளைஞர்களும் கட்டுநாயக்காவில் வந்திறங்கிய வேளை அவர்கள் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

## மாணவர் முத்திரைக்கு...

யாழ் மாவட்டத்தில் மாணவர்களின் மதிய போசன உணவு முத்திரைக்குச் சீனி, ஹைலன்ட் பால்மா ஆகியன வழங்கப்பட்டுவருகின்றன.

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் மாணவர்களின் மே, ஜூன், ஜூலை, ஒகஸ்ட் ஆகிய மாதங்களுக்குரிய மதிய போசன உணவு முத்திரைக்கு இவற்றைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (14)

# எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையை ஜனவரியில் நடத்த அரச அதிபர் முடிவு

யாழ் மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள அரச அலுவலகங்களின் எழுதுவினைஞர் பதவிகளை விரைவில் நிரப்ப அரசாங்க அதிபர் துரித நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சையை அடுத்த மாதம் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பரீட்சைக்கான வினாத்தாள்கள் கொழும்பில் பரீட்சைத்திணைக்களத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இனி அச்சிடும் வேலைகளே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பரீட்சை வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இருந்தே இப்பரீட்சைக்கு அதிகமானோர் விண்ணப்பித்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நான்கு மாவட்டங்களில் இருந்தும் 6500 விண்ணப்பங்கள் இப்போட்டிப்பரீட்சைக்காக கிடைத்துள்ளன.

இவற்றில் இருந்து 500 விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 04,06

## கொல்லப்படுவதற்கு முதல் நாள் கணவன் நித்திரைவராது தவித்தார்

"எனது கணவனின் உயிருக்கு ஆபத்து வரும் கவனமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார் எச்சரித்திருந்தனர்"

இவ்வாறு அத்தனகலை நீதிமன்றத்தில் சுட்டுக்கொலைப்பட்ட சந்திரசேனவின் மனைவி கூறினார்.

"கொல்லப்படுவதற்கு முதல் நாள் இரவு அவர் அமைதியின்றிக் காணப்பட்டார். நிம்மதியற்று நித்திரை கொள்ள முடியாது தவித்தார்" என்று மேலும் தெரிவித்தார்.

ஐலன்ட் பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் தனது கணவனுக்குப் பாதுகாப்பாகச் சென்ற தன் தந்தையாரும் கொல்லப்பட்டதாகக் கண்ணீர் மல்கக் கூறினார்.

## காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தில் சலவைத் தொழிலாளர்க்கு ஊத்தைச்சோடா கிடைக்கும்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சலவைத் தொழிலாளர்களுக்குத்தேவையான ஊத்தைச் சோடாவை இன்று 14ஆம் திகதி சனி முதல் வழங்கவுள்ளது.

கிராமசேவை அலுவலர்கள் 'சலவைத் தொழிலாளர்' எனச் சிபார்சு செய்த கடிதத்துடன் செல்வோருக்கே இந்த ஊத்தைச் சோடா வழங்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள சகல சலவைத்தொழிலாளர்களும் இச்சங்கத்தில் ஊத்தைச்சோடாவை வேண்டிய அளவு பெற்றுக்கொள்ளலாமென்ச் சங்கப் பொதுமுகாமையாளர் ஸ்ரீ அருளம்பலம் தெரிவித்தார். (18)

## சபையில் சு. க. எம்பி வடகிழக்கு யுத்தம் நீன்றால் உல்லாசப் பயணிகள் வருவர்

அமைச்சர் தொண்டமான் உல்லாசப்பயணத்துறைக்கு பொறுப்பாக இருக்கிறார். எனவே இனப்பிரச்சினைத்தீர்வுக்கு அவர் நடவடிக்கை எடுத்தால் உல்லாசப்பயணத்துறை அபிவிருத்தியடையும்.

இவ்வாறு எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், நாட்டில் யுத்தம் நடைபெறுவதால் உல்லாசப்பயணிகள் வரவு குறைந்து வருகிறது இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு யுத்தம் நின்றதும் உல்லாசப்பயணிகளின் வருகையும் அதிகரிக்கும் என்றார். (08)

## சவுதி அரேபியாவில் இருந்து நாடுதிரும்பியவர் கைது

எட்டு வருடங்கள் சவூதி அரேபியாவில் தொழில் புரிந்துவிட்டு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி நாடு திரும்பிய திருகோணமலையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி ரவீந்திரன் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவர் தற்போது களுத்துறை சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரை விடுவிக்கக்கோரி இவரின் சகோதரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். 08

## நத்தார் தபால்கள் தேக்கம்

வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட நத்தார் கடிதங்களும் பார்சல்களும் கொழும்பு பிரதம தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னர் வெளிநாட்டு நத்தார் தபால்கள் மார்கழி மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்துசேர்வது குறிப்பிடத்தக்கது.

இந்த தபால்கள் பெரும்பாலும் அடுத்து வரும் கப்பலில் அனுப்பிவைக்கப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 06

## விவரம் பெறுவதற்கு ஆசிரியர்களுக்கு அழைப்பு

01. 01. 1988க்கு முன் சங்கீத நடன 4 ஆண்டுகால டிப்ளோமா பட்டம் பெற்று பட்டதாரிச் சம்பளம் பெறாத ஆசிரியர்களையும், பட்டதாரி ஆசிரியராக இருந்து 01. 01. 1988ல் பட்டதாரி பதவி அணியில் இல்லாத பட்டதாரி ஆசிரியர்களையும் முறையே சங்கீத ஆசிரியர்களுக்கு 01. 10. 1988ல் இருந்து பட்டதாரி சம்பளம் வழங்குவதற்காகவும், 01. 01. 1991ல் இருந்து 150 ரூபா விசேடப்படி வழங்குவதற்காகவும் உரிய தகவல்களை பெற்று நடவடிக்கை எடுப்பதற்காக யாழ் கோட்டக்கல்விப் பணிமனைக்கு 23. 12. 1991 காலை 9.00 மணிக்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது சமுகமளிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## பற்றறி கடத்தல்

வவுனியாவிலிருந்து நெல்லை உரப்பையினுள் கொண்டுவந்தவர் படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் நெல்லுடன் சேர்ந்து பற்றறிகளை கடத்தி வந்ததாலேயே தாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. 06

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மலேரியா நோய் பரவுகிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்து வருவதால் பலர் மலேரியா நோய்க்கு உள்ளாக்கப்பட்டுவருகின்றனர்.

இப்பகுதியில் நீண்ட காலமாக மலேரியா தடுப்பு பகுதியினரின் பணி தடைப்பட்டு வருவதினால் நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது.

இப்பகுதி வைத்திய சாலைகளுக்கு வந்தவர்கள் நுளம்பின் தாக்கத்தினாலும் காட்டுப் பன்றிகளாலும் காய்ச்சல், மலேரியா, மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்க்கு ஆளாகி இருப்பதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன. 08

## பால்மா விநியோகம்

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், காரைநகரைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இன்று முதல் பல வகையான பால்மாக்களை வழங்கவுள்ளது.

லக்டோஜன், நெஸ்டோமோல்ட், மைலோ முதலான பால்மா வகைகளே வழங்கப்படவுள்ளன.

காரைநகர்ப் பிரிவுக்குழந்தைகளின் போஷாக்கு அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு 'செரிலைக்' பால் உணவும் இன்று முதல் வழங்கப்படும். (18)

## உற்பத்திப் பொருள்களை விற்க முடியவில்லை

வடபகுதிக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டு வருவதனால் வன்னி மாவட்ட உற்பத்தி உணவுப் பொருள்கள் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் அவதியுறுகின்றனர்.

இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் சிறுதானிய வகைகள் போக்குவரத்துத் தடையால் முடங்கிக் கிடக்கின்றன இதனால் பணப் புழக்க நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை எரிபொருள் மின்சாரத் தடையால் சில விவசாயக் குடும்பங்கள் தமது அறுவடை நெல்லை அரிசியாக்க முடியாமலும் அவதியுறுகின்றனர். 08

## குட்டியப்புலம் அகதிகளுக்கு நிவாரணம் வழங்கவில்லை

குட்டியப்புலம், வடக்கு புன்னாலைக்கட்டுவன், வயாவிளான் பகுதிகளில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த முப்பத்தொன்பது குடும்பங்கள் அச்செழு மெதடிஸ்த மிசன் த. க. பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்,

இதேபோல கதிரிப்பாய் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 15 குடும்பங்கள் கோப்பாய் பூதர்மடத்திலுள்ள சிறிய பாடசாலையில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு இதுவரை நிவாரண உதவிகள் வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. 06

## இலங்கை வங்கி ஊழியருக்கு அபாயக்கொடுப்பனவு இல்லை

யாழ் மாவட்ட இலங்கை வங்கி உத்தியோகத்தர்களுக்கு அபாயக்கொடுப்பனவு இன்னமும் ... உத்தியோகத்தர்கள் ஊழியம் விதித்த போதிலும் எதுவித பயனும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஏ. எஸ். பிக்கு எதிராக நீதிமன்றம் பிடி ஆணை

கொழும்பு உயர் நீதி மன்றத்தினால் ஏ. எஸ். பி. கலாசூரியா என்பவருக்கெதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடி ஆணையை வாபஸ் பெறுமாறு சமர்ப்பிக்கப்பட்ட ... தாகவும் தனது சாட்சியத்தை குறிப்பிட்ட தவணையில் பதியுமாறும் கேட்டுக்கொண்டார்.

## தொண்டமானின்...

சினையை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படியாக தீர்க்கவே ...

## சந்தனக்காடு...

## தொண்டமானின்...

சினையை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படியாக தீர்க்கவே நான் புதிய சமரஸத்திட்டத்தை தயாரித்தேன்'' என அமைச்சர் தொண்டமான் அப்போது குறிப்பிட்டார்.

## தமிழ்...

இதேவேளை தமிழ்நாடு கர்நாடக முதலமைச்சர்களை புதுடில்லி வருமாறு பிரதமர் நரசிம்மராவ் கேட்டுள்ளார்.

பிந்திக் கிடைத்த செய்திகளின் படி கர்நாடகத் தலைநகர் பங்களூரில் மூன்று நாள்களுக்கு ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள், அரச அலுவலகங்களுக்கு ஒருவார விடுமுறை அளிக்கப்பட்டு அனைத்தும் நேற்று மூடப்பட்டன.

கர்நாடக மாநிலத்துடனான விமான மற்றும் ரயில் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் அந்த மாநிலம் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுவிட்டதாக செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்,

யாழ் மாவட்ட இலங்கை வங்கி உத்தியோகத்தர்களுக்கு அபாயக்கொடுப்பனவு இன்னமும் கிடைக்கவில்லையென வங்கி ஊழியர்கள் புகாரிடுகின்றனர்.

இதுபற்றி யாழ் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றை வங்கி உத்தியோகத்தர்கள் கையளித்த போதிலும் எதுவித பயனும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது,

அதே வேளை சிவில் நிர்வாகம் சீர்குலைந்து செயல்படாதிருக்கும் நீதிமன்ற ஊழியர்களுக்கு இப்பணம் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. 08

## மினி...

இறக்கிவிடப்பட்டபின்னர் பஸ் தீக்கிரையாக்கப்பட்டது ஈரதியும் பலமாக தாக்கப்பட்டார்.

பலியான மாணவியின் இறுதிச்சடங்கிற்கான பொறுப்பை கொழும்பு பல்கலைக்கழகம் ஏற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

## அச்சுவேலி...

களுக்குச் செல்லத் தொடங்கினர்.

பலாலிப்பகுதியில் இருந்து செல்வநாயபுரம்-தென்மூலைப் பகுதிகளை நோக்கி இரண்டு ஷெல்கள் ஏவப்பட்டதைத் தொடர்ந்தும், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்துமே இவ்வதந்தி கிளப்பப்பட்டதாக தெரியவந்துள்ளது. 20

## ஒருவாரம்...

ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் இன்று முதல் உலர் உணவுகள் வழங்கப்படவிருக்கின்றது.

இந்தநிவாரணம் ஒருவாரத்துக்கு மட்டும் வழங்கப்படும் 'உ' அட்டை உள்ளவர்களுக்கு பணத்துக்கும் 'அ' அட்டை உள்ளவர்களுக்கு இலவசமாகவும் வழங்கப்படும். (06)

## தச்சன்...

லேயே பலியானார்.

பலியான இரு சிப்பாய்களின் சடலங்களை தூக்க முயன்ற மற்றோர் இராணுவச் சிப்பாய் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலில் அச்சிப்பாயும் பலியானார்.

இதைத்தொடர்ந்து பலாலி முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல கதிரிப்பாய் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 15 குடும்பங்கள் கோப்பாய் பூதர்மடத்திலுள்ள சிறிய பாடசாலையில்

## தமிழர்...

கள், கதவுகள், யன்னல்கள் என்பன படையினரால் களவாடப்பட்டதாகவும் இவை பொலநறுவைப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ள சிங்களவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மிகுதி...

வரப்பட்டு அங்கிருந்து காங்கேசன்துறைக்கு கொண்டுவரப்பட்டு கப்பலில் பருத்தித்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டன

பருத்தித்துறையில் இருந்து செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் யாழ் கச்சேரிக்கு வந்து சேர்ந்தன. (06, 04, 08, 20)

## மாளிகாவத்தை...

பிறப்புச்சான்றிதழ் பெறுதரகர்களின் உதவியை வடபகுதி வாசிகள் நாடி வருவதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

நாட்டில் உள்ள பிறப்பு இறப்புச்சான்றிதழ்களின் பிரதிகள் இந்த அலுவலகத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (06)

கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் ஏ. எஸ். பி கலாசூரியா என்பவருக்கெதிராகப் பிறப்பிக்கப்பட்ட பிடி ஆணையை வாபஸ் பெறுமாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை மேல் நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரன் நிராகரித்தார்.

இந்த வழக்கில் முக்கிய சாட்சியான ஏ. எஸ். பி தான் வெளிநாடு செல்ல இருப்ப

## பிணையில்...

பலவந்தப்படுத்தப்பட்டதாலேயே தமிழக முன்னாள் அரசிற்கு ஒத்துழைத்ததாகவும் இதனால் தம்மை பிணையில் விடுவிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

## சமூகக்கல்வி...

தனர்.

இந்த வினாத்தாளின் தலைப்பில் 'வரலாறும் சமூகக்கல்வியும்' என்றிருக்க வேண்டிய இடத்தில் 'வரலாறும் சமூகக்' என அரைகுறையாகத் தமிழில் அச்சிடப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (35)

## தடை...

டையே சேவையிலீடுபட்ட இ. போ. ச. பஸ் வண்டியொன்று தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

தாகவும் தனது சாட்சியத்தை குறிப்பிட்டதவணையில் பதியுமாறும் கேட்டுக்கொண்டார்.

## சந்தனக்கேடு...

மகளிர் கல்லூரி திறந்த வெளியரங்கில் மேடையேறவிருக்கின்றது.

தமிழீழ மாவீரர் நாளிற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இந் நாடகம் இன்று 15ஆவது தடவையாக மேடையேறுகின்றது

## தலாய்லாமா...

சீக்கு எதிரான நடவடிக்கை ஒன்றிற்குத் தலைமை தாங்கியமைக்காக 40 வயதுடைய குசி 1989 ஜூலை மாதத்திலிருந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## தொழிலாளர்...

மடைந்தனர்..

ஏழு பேர் இலக்கத்தகடு இல்லாத வாகனத்தில் வந்ததாகவும், முதலில் பசறை 13 ஆம் கட்டையில் நிறுத்தப்பட்ட வாகனம் ஒன்றை அடித்து சேதம் பத்திய பின்னர் அருகில் உள்ள தொழிலாளர்களின் குடியிருப்புக்குள் புகுந்து தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவம் குறித்து தோட்டத் தொழிற் சங்கங்கள் முறைப்பாடுகள் தெரிவித்துள்ளன. 08

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 14. 12 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது